# பகுதி 2:
# இயேசுவின் மறுவருகை

*வேதாகமத்தின் ஆய்வுப் பொருளைப் பின்வரும் மூன்று சொல் விளக்கங்களில் தொகுத்துரைக்க முடியும்: "இயேசு வருகின்றார்," "அவர் வந்தார்," மற்றும் "அவர் மீண்டும் வருகின்றார்." அவரது மறுவருகை என்பது புதிய ஏற்பாட்டில் உள்ள மாபெரும், மெய்சிலிர்க்கச் செய்யும், மற்றும் பயபக்தியுள்ள போதனையாக உள்ளது. அநேகமாக, வேறு எந்த கிறிஸ்தவ போதனையும் இதை விட அதிகமான ஆர்வத்தையும் யூகத்தையும் எழுப்பியிருக்கவில்லை என்று கூறலாம்.*

*அவரது மறுவருகை பற்றி, "எவ்வாறு?"; "எப்போது?"; "எங்கே?" மற்றும் "ஏன்?" என்ற கேள்விகளுக்குப் பலதரப்பட்ட பதில்கள் தரப்படுகின்றன. இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க நமக்குப் போதிய தகவல்கள் உள்ளன, ஆனால் இந்தக் கேள்விகள் தொடர்பான நமது ஆர்வத்தை திருப்தி செய்யவோ அல்லது இது தொடர்பான எல்லாச் சாத்தியக்கூறுகளையும் விளக்கப்படுத்தவோ நமக்குப் போதிய தகவல்கள் இருப்பதில்லை.*

*இந்தத் தலைப்பானது ஆர்வமூட்டுவதாகவும் நமது ஆழ்ந்த சிந்தனைக்குத் தகுதியானதாகவும் இருந்தாலும், இயேசுவின் இரண்டாம் வருகை தொடர்பான ஒவ்வொரு விஷயமும் நமது இரட்சிப்புக்கு அவசிய மானவையல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அவரது மறுவருகைக்கு ஆயத்தமாயிருப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய அறிவுதான் மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அவரது வருகையைச் சுற்றிலும் அதைத் தொடர்ந்தும் நடைபெறவிருக்கும் விஷயங்கள் எல்லாவற்றைப் பற்றியும் நாம் அறிந்து[ம்], அவர் வரும்போது நம்மை அவர் ஏற்றுக்கொள்ளும் வகையில் வாழவில்லையென்றால், நமது அறிவு யாவும் வீணானதாக இருக்கும்.*

*இயேசு வரும்போது நாம் ஆயத்தமாயிருக்கும்படி நம்மை ஊக்குவிப்ப தற்காக, அவர் மறுபடி வரும்போது என்ன நடக்கும் என்பதில் சிலவற்றை நமக்குக் கூறியுள்ளார். இயேசு, "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்" என்று கூறினார் (மத். 24:42).*

*இந்தப் பகுதியில் நாம், இயேசு மறுபடி வரும்போது என்ன நடக்கும் என்பதைப் படித்து, அவர் பூமியின்மீது அரசாளுவாரா இல்லையா என்பதைத் தீர்மானிக்க நாடி, உயிர்த்தெழுதலில் உள்ளடங்கியிருப்பது என்ன என்பதைப் பரிசீலனை செய்து, நியாயத்தீர்ப்பு நாள் எவ்வாறு இருக்கும் என்பது பற்றி ஆழ்ந்து சிந்திப்போம்.*